DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 127/2015** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : சண்முகவேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 10 June 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா. மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நிரந்திரமான தொழில் எது என்றால் தறி வியாபாரம் ஆகும். இந்த வழக்கு போடுவதற்கு முன்பாக நான் சங்கரன்கோவிலில் உள்ள பல நபர்களுக்கு கடன் கொடுத்து அதன் அடிப்படையில் காசோலை வழக்கு, கடனுறுதி சீட்டு வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் இந்த நீதிமன்றத்தில் வெங்கடேஷன் என்பவருக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். எதிரி குற்றாலத்தின் தந்தை சுப்பிரமணியன் என்பவர் சங்கரன்கோவிலில் பேன்ஸி ஸ்டோர் என்றால் சரியல்ல. எதிரியும் அவர் சகோதரர் வெங்கடேஷன் இருவரும் இணைந்து தான் பேன்ஸி ஸ்டோர் வைத்திருந்தார்கள். அந்த பேன்ஸி ஸ்டோரை 2018-ம் ஆண்டு முடிவிட்டார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியாது. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.4,00,000/- என் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் கொடுக்கவில்லை. என் மனைவின் தங்கை காது மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டதால் அவரை பராமரிக்க வேண்டி என் மாமனார் எனக்கு ரூ.4,00,000/- கொடுத்திருந்தார். அந்த பணத்தைதான் நான் எதிரிக்கு கடனாக கொடுத்தேன். என் மாமனார் பெயர் என்னவென்றால் சங்கரமகாலிங்கம். சங்கரமகாலிங்கத்தை நான் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் அவர் இறந்துவிட்டார். நான் எதிரிக்கு கடன் கொடுத்த விபரம் வேறு யாருக்காவது தெரியுமா என்றால் என் மனைவிக்கு தெரியும். காசோலையில் உள்ள தேதி, பெயர், தொகை, ஆகியவை என்னால் எழுதப்பட்டது என்றால் என்னால் எழுதப்படவில்லை. எதிரிதான் எழுதி காசோலை என்னிடம் கொடுத்தார். காசோலை என் முன்பாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பாக எதிரிக்கு ஒரு வழக்கறிர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அனுப்பினேன். நான் அனுப்பிய வழக்கறிர் அறிவிப்பிற்கு எதிரி கடந்த 18.04.2015 பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். பதில் அறிவுப்பில் எதிரி என்ன சொல்லியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரி பதில் அறிவிப்பில் வழக்கு காசோலை அவர் வங்கி கனக்கு காசோலையில்லை என்று குறிப்பிட்டு பதில் அறிவிப்பு சொல்லியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

ஆனால் வழக்கு காசோலை எதிரியுடையது தான். எதிரி அந்த பதில் அறிவிப்பில் வழக்கு காசேலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசேலை என்னால் வங்கியில் 2 முறை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 முறையும் வழக்கு காசேலை தாக்கல் செய்யப்பட்டபோது போதிய பணம் இல்லை என்ற காரணத்தால் திருப்பப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் கூறியுள்ள உறுதிமொழி கூற்றில் வழக்கு காசோலை 2 முறை வங்கியில் தாக்கல் செய்து வங்கியில் இருந்து திருப்பப்பட்ட காரணம் Kindly contact to Drawer/Drawee bank and present AGA என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சங்கரன்கோவில் கனரா வங்கி காசோலை ஆனால் எதிரிக்கு கனரா வங்கியில் எந்தவிதமான வங்கி கணக்கும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையில் உள்ள எதிரியின் கையொப்பமும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம், கனரா வங்கியில் எதிரி பெயரில் இல்லாதது அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனுவானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் அனுமதிதக்கது அல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்ட வங்கி கணக்கிற்கான காசோலை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே எதிரியின் சகோரதர் வெங்கடேஷ்

என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்ட காசோலையின் அடிப்படையில் எதிரி வெங்கடேஷ் என்பவர் குடும்ப உறுப்பினர் என்பதால் அவரை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட என்னத்தில் எதிரிக்கு சொந்தம் இல்லாத காசோலையை எதிரிபோல் கையொப்பம் போட்டு மோசடித்தனமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை மற்றும் எனது மனுவில் கூறியுள்ளவாறு எதிரிக்கு நான் ரூ.4,00,000/- கடன் கொடுத்ததாக சொல்வதும், எதிரி வழக்கு காசோலை என்னிடம் கொடுததார் என்று சொல்வதும், உண்மை அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.